★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 30௳ செவ்வாய் (13—3—56) ★ ★ வெளியீடு: பங்குனி 1௳ புதன் (14—3—56) [இதழ் 231

நாள்தோறும் வளரும் மனித சாதனை!

மனிதனின் அரிய சாதனைகள் நாளுக்குநாள் விரிந்துகொண்டே செல்கின்றன. விமானமோட்டும் வேகம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

'பிரிட்டன் விமான கிளப்', மணி ஒன்றுக்குச் சராசரியாக 1,132 மைல் வேகத்தில், 'பெய்சி டெல்டி 2' என்ற விமானத்தை ஒருவர் ஓட்டிச்சென்றதாகத் தெரிவித்திருக்கிறது.

அமெரிக்க விமானி ஒருவர் மணி ஒன்றுக்கு 824 மைல் வேகம் ஓட்டியதுதான், உலக 'ரிகார்டாக'க் கருதப்பட்டது. லண்டன் விமானியின் செயற்கரிய செயல் 'புதிய ரிகார்டு' உருவதற்கு வழிகண்டுள்ளது.

-*-***********

'ஜனநாயக ஒழுங்கு'

★

"ஜனநாயக முறையை ஒட்டி அந்த ஆறு காங்கிரஸ் அங்கத்தினர்கள் காங்கிரஸ் கட்சியில் உள்ளவரை அதன் கட்டு திட்டங்களுக்குட்பட்டு மெஜாரிட்டி முடிவுப்படி நடந்து கொள்ள இசைந்திருப்பதே யோக்கியம்; அதற்குச் சம்மதம் இல்லையேனில் அக்கட்சியிலிருந்து இராஜினமா செய்வதோடு, காங்கிரசின் பெயரால் தாங்கள் அசெம்பிளியில் பெற்ற ஸ்தானங்களையும் இராஜினமா செய்திருக்க வேண்டும். கட்சி முடிவுப்படி நடக்க மறுத்து அவர்கள் கட்சியிலிருந்து மட்டும் இராஜினமா செய்தனரேயன்றி அசெம்பிளி ஸ்தானங்களைத் துறக்க முன்வரவில்லை. இதிலிருந்து அவர்கள் துரெண்ணம் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது."

—திரு-கொச்சி காங்கிரஸ் மந்திரி சபை கவிழ்வதற்குக் காரணமாயிருந்த ஆறு காங்கிரஸ் உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர் பதவியை இராஜினமா செய்யாதது பற்றி 12—3—56 'சு.-மி.' தனது தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

***** ******** *****

'காங்கிரசில் பரஸ்பர கழுத்தறுப்புப் போராட்டம் மிஞ்சிப்போயுள்ளது'

'இத்தொத்து நோய்க்கு ஏற்ற பரிகாரமாக எனது தியாகமிருக்கட்டும்'

'ஏதாவது சந்தர்ப்ப ஆதரவை நம்பி ஆட்சியிலிருப்பது ஒழுக்கக்கேடாகும்'

திரு-கொச்சி காங்கிரஸ் கட்சி பற்றி பனம்பள்ளி கோவிந்த மேனன்

"1948-ம் ஆண்டிலிருந்து இந்த மாகாணத்தில் பல அமைச்சரவை விழ்ச்சியுற்றிருக்கிறது. எதிர்கட்சிகளின் பலத்தினுல் இவ்விழ்ச்சிகள் ஏற்படவில்லை. ஆளும் கட்சியினரிடை இருந்துவரும் பரஸ்பர கழுத்தறுப்புப் போராட்ட முளைப்பே இவ்விழ்ச்சிகளுக்குக் காரணமாகும். இத்தொத்து நோயைப் போக்க இது பயன்படுமா என்பதைக் கண்டறியவே, நான் 'இத்தியாகத்தை' (பதவித் துறத்தல்) செய்கிறேன்."

இக்கருத்தை திரு-கொச்சி முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன், ஆட்சிப் பொறுப்பைத் துறந்ததும் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"அடிக்கடி இங்கு அமைச்சரவை சரிந்துவிழும் தொல்லை இருந்துவருகிறது. இம் மாகாணத்தின் காங்கிரஸ் கட்சியை மேலும் ஒழுங்குள்ளதாகத் திருத்தி அமைப்பதே, அத்தொல்லைக்கேற்ற பரிகாரமாகும். எவரைப் பற்றியும் இந்தக் குறைபாட்டை நான் கூறவில்லை. இதை சுயவிமர்சனம் என்ற முறையிலேயே குறிப்பிடுகிறேன்."

'நான் உள்பட காங்கிரஸ் கட்சியினர் அனைவரும் மேலும் ஒழுங்காக நடந்துகொள்ளக் கற்றுக்கொள்ளவே வேண்டும். இது, எவரிடத்தும் நான் தவறுகாண முயலுவதாகப் பொருள்படாது.'

"காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்படுவதற்கு முன்பு, காங்கிரஸ் கட்சியில் 53 உறுப்பினர்கள் இருந்தனர். அத்துடன், ஒரு சுயேச்சை உறுப்பினரின் ஆதரவும் கிடைத்தது. இதன் காரணமாகக் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது."

"ஆறு காங்கிரஸ் உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டனர். இப்பொழுது காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கை 54 எனக் குறைந்துவிட்டு இருக்கிறது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் மேலும் காங்கிரஸ் கட்சி பதவியில் இருந்துவருவதை, 'ஒழுக்கக் கேடு' என்று நான் கருதுகிறேன்.

'தென்னிந்திய மொழி இனத்தைச் சேர்ந்ததல்ல இந்தி'

'அதைக் கற்பதில் அவர்களுக்கு நியாயமான சங்கடங்கள் உண்டு'

மொழி ஆய்வுக் குழுத் தலைவரின் விளக்கம்

பாட்னு, மார்ச் 12—

"இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தியைப் புகுத்துவதற்குப் பதினைந்து ஆண்டு வரையறை போதாது என்று தென்னிந்தியாவில் பலர் கருதுகிறார்கள்."

இவ்வாறு மொழி ஆய்வுக் குழு தலைவர் பி. ஜி. கேர் கூறியுள்ளார்.

"தங்களுடைய மொழிக் குடும்பத்தைச் சேராத ஒரு மொழியாக இருக்கின்றதால், இந்தி விஷயத்தில் தென்னிந்தியர்களுக்கு உண்மையான சங்கடங்கள் இருக்கின்றன.

"இந்தி ஆட்சி மொழியாக ஆவதில், எந்த எதிர்ப்பையும் தென்னிந்தியாவில் நான் காணவில்லை.

"தென்னிந்தியாவில் கேட்கப்பட்ட கேள்விகளில் பெரும் பகுதி, எழுத்துப் பற்றியும், இந்தியைப் புகுத்தும் காலக் கெடுவைப் பற்றியதேயாகும்.

"பதினைந்து ஆண்டுகள் போதாது என அவர்களில் பலர் கருதுகின்றனர்.

மாராட்டிர மந்திரிக்குக் கருப்புக் கொடி!

'திரும்பிப் போ' என்று முழக்கம்

அகமத்நகர், மார்ச் 10—

பம்பாய் ஸ்தல ஸ்தாபன மந்திரியான ஒய். பி. சாவன் அவர்களுக்கு எதிராக 400 மாராட்டிரர்கள் கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். 'மந்திரிகளே திரும்பிப் போ' என முழக்கமிட்டனர்.

அகோலா தாலுக்கா காங்கிரஸ் மாநாட்டைத் திறந்துவைக்க வந்த அமைச்சரை இவ்வாறு பம்பாய் உள்ளிட்ட மாராட்டிர மாகாண கோரிக்கையினர், வரவேற்றனர்.

மாநாட்டில், பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மாராட்டிர மாகாணம் அமைக்கவேண்டும் என்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. மாநாட்டிற்கு நாசிக் மாவட்டத் தொகுதி சட்டசபை உறுப்பினரான எம். எல். ஜாதவ் தலைமை வகித்தார்.

அதே அமைச்சர், லோபர்கோன் என்ற ஊருக்குச் சென்றபோதும் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மந்திரி சபையிலிருந்து விலகும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு மனு மூலம் அந்த மந்திரியை வேண்டிக் கொண்டனர்.

★

மற்றொரு மாராட்டிர மந்திரிக்கும் அதே வரிசை

மந்திரி இல்லாது ஏமாற்றம்!

சோலாபூர், மார்ச் 11—

"பம்பாய் நிலவரி அமைச்சரான இரே அவர்களுக்குக் கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்."

ஆர்ப்பாட்டக்காரர்கள் பம்பாய் செல்லும் சென்னை மெயில் இரயில் வண்டியில் மேற்படி அமைச்சரைத் தேடினர். ஆனால், இயந்திரத்திற்கு அடுத்த முதல் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்வதற்குப் பதிலாக தொடருக்குக் கடைசியில் இருந்த முதல் வகுப்பு வண்டியில் அமைச்சர் பிரயாணம் செய்தார். இயந்திரத்திற்கு அடுத்த வண்டியை சூழ்ந்துகொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், குறிப்பிட்ட மந்திரியை அங்கு காணுது ஏமாற்றம் அடைந்தனர்!

காமராசர் அதற்குள் அலறுவானேன்?

பொதுத் தேர்தலில் கழகப் பங்கு?

சென்னை கூட்டத்தில் அண்ணு கேள்வி

அர்த்தால் நடத்திய கூட்டணி கண்டு காமராசர் கிலி கொண்டிருப்பது ஏன்? பொதுத் தேர்தல் குறித்து தி. மு. கழக நிலை என்ன?—என்பவற்றை சென்னைக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் விளக்கினர்கள். அவரது சொற்பொழிவின் முதற் பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது. தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது :—

"'அர்த்தாலுக்கு என்ன பலன்?' என்று கேட்கிறார்கள்; ஆனல், அது அல்ல கேள்வி; 'அர்த்தாலுக்குக் காரணம் என்ன?' — அதைக் கேட்க வேண்டும். 'அர்த்தால் எப்படி வெற்றி பெற்றது?'—அதை ஆராய வேண்டும்.

"அர்த்தாலுக்கு என்ன பலன்? இப்போதா அது தெரியும்? சொல்லிவிட்டா பலன் காட்டும்? காமராசர் தடுத்தால் நிற்கவா செய்யும்? பலன் தானுக வரும்.

"விதை தூவினுல், சத்தற்றதும், பதரும் முளைவிடாமல் போனுலும் சத்துள்ளது முளைக்கத்தான் செய்யும்; பலன் தரும். அதுபோல, பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தால், தமிழ் நாட்டில் தமிழ்ப் பண்பு, தமிழர் ஒழுக்க உணர்ச்சி, சட்டத்திற்கு தலைவணங்கும் தன்மை, அடக்கம், அரசியல் ஆர்வம், எழுச்சி—இத்தனை விதைகளையும் தூவியுள்ளது' கள்ளி, காளான் தோன்றினுல் பின்னுல் அழித்துவிடலாம்; ஆனுல், களையெடுத்தபின் அருமையான செந்நெல் கிடைப்பது போல, எதிர்காலத் தமிழகம் இன்பமான பலனைப் பெறத் தான்போகிறது. இதனை வரலாறு கற்றவர்கள் உணர முடியும். காமராசர் என்ன காணமுடியும், அர்த்தாலின் பலன் குறித்து! கிளர்ச்சி நடைபெற்றதும் அதன் பலன் உடனே தெரிந்துவிடாது.

"ஒரு பலன் தெரிந்ததே! வாய் திறவாதிருந்த காமராசர் ஓடி ஓடிப்போய் பேசுகிறாரல்லவா? அது ஏன்? நிமிடக் கணக்கில் பேசி அறியாத காமராசர் 40 நிமிடம் பேசியதாக பத்திரிகைகளில் செய்தி வந்ததே; எது அவரைப் பேச வைத்தது? ஈஜிப்டு நாட்டு சிலை போலத்தான் நான் இருப்பேன்—சிரிப்பதாக நண்பர்கள் எண்ணிக்கொள்ளட்டும்; சீறுவதாக விரோதிகள் எண்ணிக் கொள்ளட்டும்; ஆண்டவன் எனக்களித்த சொரூபம் அது —என்று வாய்திறவாமலிருந்த காமராசரைப் பேசவைத்தது, பிப். 20 அர்த்தால்தானே! இது அர்த்தாலின் வெற்றியல்லவா? இந்த வெற்றி எதனுல் கிடைத்தது? தி. மு. கழகத்தாலும் அதனுடன் இணைந்த கூட்டணியினுலும்தானே!

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 13—3—'56 செவ்வாய்

நாற்பது நிமிட வசைமாரி!

சர்வகட்சிக் கூட்டணி எதற்காக உருவெடுத்துள்ளதுஎன்ற அடிப்படை உண்மையை ஊரறியும். எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் பொது வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளும்படி தமிழ் மக்களுக்கு அழைப்புவிட்டிருந்தது என்பதிலும் ஒளிவுமறைவு ஒன்றும் கிடையாது.

நாடாளும் நாயகரான காமராசர் அவர்களுக்கும் மேற்படி உண்மை தெரிந்திருக்கவேண்டும். தமக்கும் அந்த உண்மை தெளிவாகத் தெரிந்திருக்கிறது என்பதை, பொது வேலைநிறுத்தத்திற்குமுன், முதலமைச்சர் என்ற முறையில் தாம் விடுத்துள்ள இரண்டு அறிக்கைகள் மூலமாக அவர் ஒப்புக்கொண்டும் உள்ளார்.

நாணயத்தின் அடிப்படையில் அரசியல் வாழ்வை அமைக்கவேண்டும் என்பதில் கவலை கொண்டிருக்கும் எவரும், முன்னால் ஒப்புக்கொண்டுள்ள உண்மைக்கு மாருக பின்னர் நடந்துகொள்ளத் துணியமாட்டார்கள். அப்படித் துணிகிறவர்களை, நாட்டு மக்கள் நலம் நாடும் நல்லறிவாளர்கள், துச்சமென மதிக்கத்தான் முந்துவர்.

கூட்டணியின் மூலக் கொள்கையையும், பொது வேலைநிறுத்தத்தின் உள்ளடக்கத்தையும் விளக்கமாகத் தெரிந்துகொண்டு, தெரிந்துகொண்டதுடன் வேலை நிறுத்த நாளுக்கு முன்னால் அதை வெளிப்படையாக இரண்டு அறிக்கைகள் மூலம் ஒப்புக்கொண்டு, வேலை நிறுத்தம் வெற்றிகரமாக முடிந்துவிட்டதைக் கண்டதும் ஏற்பட்ட அதிர்ச்சியினுல், வேலை நிறுத்த அடிப்படை நோக்கத்திற்கு உட்பொருள் கூறக் கிளம்பி இருக்கிருர்—அரசியலில் நாணயத்தையும், கண்ணியத்தையும் என்றுமே கையாண்டு அறியாத முதலமைச்சர் காமராசர் அவர்கள்.

தமக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சிக்கு, அவர் பரிகாரம் தேடிக்கொள்ள எடுத்துக்கொள்ளும் முயற்சி கண்டு ஆத்திரப்படவேண்டிய அவசியம் நமக்கு இல்லை.

ஆனுல், அவர் போக்கில் மறைந்து கிடக்கும் எதிர்காலம் பற்றிய அவருக்குள்ள அச்சத்தை எடுத்துக்காட்டாமல் இருக்க நம்மால் இயலவில்லை.

பொது வேலைநிறுத்தத்திற்கான மூலக் கொள்கைகளை உணர்ந்து கொண்டதுடன், அதை ஒழுங்காக நிறைவேற்றுவதற்கான தமது உள்ளக் கிடக்கையையும், மக்கள் சபையில், இந்தியப் பிரதமர் அறிவித்தார். அத்துடன் அவர் நின்றிருந்தால் அவருடைய பொறுப்பான பதவிக்குப் பொருத்தமாக இருந்திருக்கும். விஸ்வாமித்திர இயல்பு கொண்ட இந்தியப் பிரதமரிடம், அக்கட்டுப்பாட்டை எதிர்பார்க்க முடியுமா? எனவே, இயல்புக்கேற்ப, தமிழ் நாட்டைத் துண்டாட எண்ணுகிறவர்கள் இந்தப் பொது வேலை நிறுத்தத்தைத் தூண்டினுர்கள் என்று, சம்பவத்திற்குத் தொடர்பற்றச் சொல்லையும் சொல்லிவிட்டார்.

இந்தியப் பிரதமரின் பேச்சைக் கேட்ட கூட்டணியினர், அவரைப்போல வரைகடந்துவிடாது, பொது வேலைநிறுத்தத்தின் உள்ளடக்கத்தை மீண்டும் எடுத்துக்காட்டி அவருக்குத் தெளிவூட்டினர்.

இச்செயலில் பொதுவாகக் கூட்டணியினுடைய-குறிப்பாகக் கூட்டணியின் தலைவருடைய பெருங்குணமும் பொருந்தப் பேசும் செயல் திறமும்தான் இருக்கின்றன.

கூட்டணித் தலைவரின் விளக்கம், வெள்ளறிவு படைத்தவர்களுக்கும் விளக்கமாகத் தெரியக் கூடியதாகும். அத்தகு வெள்ளறிவு கூடத் தமக்குக் கிடையாது என்பதைக் காட்டிக்கொள்வது போன்று, முதலமைச்சர் காமராசர் அவர்கள், கூட்டணித் தலைவருக்குக் கோழைத்தனத்தைச் சூட்டிக் களிக்கிருர். கோட்டானிடம் குயிலிசையின் இனிமையை எதிர்பார்க்க முடியுமா?

பொது வேலைநிறுத்த நாளான பிப்ரவரி இருபதாம் தேதியோடு கூட்டணியும் கலைக்கப்பட்டுவிடும் என்று காமராசர் திடமாக நம்பி இருந்தார் என்பது அவர் பேச்சிலிருந்து விளக்கமாகிறது. அவர் எதிர்பார்த்தபடி கூட்டணி சிதைந்துவிடாமல் மேலும் உருக்கு இரும்புபோல் உரம் பெற்று வருவது, அவருக்குப் பெரும் அச்சத்தைக் கொடுத்திருக்கிறது என்பதும் அவர் கத்தலிலிருந்துத் தெளிவாகிறது. வேலை நிறுத்தத்தின் முன் இரண்டு நாட்களிலும் கூட்டணியை உடைத்தெறிய கனம் காமராசர் எடுத்துக்கொண்ட மித்திரபேத இழிமுயற்சிகள், மேற்குறிப்பிட்டுள்ள நமது கருத்துக்கு அரண் செய்கின்றன.

பொதுத் தேர்தல், குறித்துள்ள காலவரையறைப்படி அடுத்த ஆண்டு துவக்கத்தில் நடைபெறுமா அல்லது மேலும் ஓராண்டுக் காலத்துக்குத் தள்ளிப்போடப்படுமா என்பதில் இறுதியான முடிவு இன்னும் தெரியவில்லை. இந்நிலையில் தேர்தலைக் குறித்த கவலை, ஆளும் காங்கிரஸ் கட்சிக்குத் தவிர மற்ற அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட நியாயமே இல்லை. எனவே, சர்வ கட்சி கூட்டணிக்கும் தேர்தலைக் குறித்துக் கருதவேண்டிய கட்டாயம், இந்தக் காலக் சட்டத்தில் ஏற்படுவதற்கு எந்தவித நியாயமும் கிடையாது. இது, சாமானியர்களுக்கும் புரியக் கூடிய உண்மையாகும்.

இச் சாதாரண உண்மையைப் புரிந்துகொள்ளாதவர் போல், கூட்டணி தேர்தலில் பங்கு கொள்வதற்காக அமைந்திருந்தால் அதைத் தம்மால் விளங்கிக்கொள்ள முடியும் என்று காமராசர் அவர்கள் கதைத்திருக்கிருர். அதுவுமன்றி, கூட்டணியின் செயலால் ஏதாவது தமக்குஏற்படுவதாக இருந்தால், தமது முதல் அமைச்சர் பதவிதானே போகப்போகிறது? அது என்ன பரம்பரை சொத்தா? எனவும், அவர் விம்மி இருக்கிருர்.

ஒரு சிறந்த ஜனநாயக மரபை நாட்டில் உருவாக்க வேண்டும் என்ற நினைப்பு, அனைத்தும் கற்றுள்ள இந்தியப் பிரதமருக்கே கிடையாது என்ருல், எதுவும் கற்றறியாத காமராசர் அவர்களுக்கா ஏற்படப்போகிறது? அப்படிக் கருதும் மதியிலிகள் இங்கு ஒருவரும் கிடையாது.

முதலமைச்சர் என்ற அந்தஸ்தில் தாம் வெளியிட்ட இரு அறிக்கைகளையும் கழிவுக் கூடையில் வீசி எறிந்துவிட்டு, கூட்டணியினரின் கோரிக்கையான பொது வேலைநிறுத்தத்தை தமிழ்மக்கள் நூற்றுக்கு நூறு வெற்றிபெறச் செய்ததை கண்டதுமே கனம், முதலமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு இலேசாகி இருக்க முன்வந்து இருக்கவேண்டும். அதுதான் ஜனநாயக நாடுகளில் தன்மானம் உள்ள முதலமைச்சர்கள் பின்பற்றும் மாண்புடை முறையாகும்.

அம்மாண்பை காமராசர் அவர்களிடம் நாம் எதிர்பார்க்கவில்லை; இனி எதிர்பார்க்கப் போவதுமில்லை. பிப்ரவரி இருபதில் தமிழ் மக்கள் தமது முகத்தில் பூசிய கரிப்பூச்சு கலையாத நிலையிலுட், தமிழ்மக்கள் பேராதரவு தமக்கு இருப்பதாகக் கூறும் அவரிடமா, பதவியைத் துறப்பார் என நாம் எதிர்பார்க்கப்போகிருேம்? ஒருக்காலுமில்லை!

பொதுத் தேர்தலுக்குப் பிறகும் தாமே முதலமைச்சர் ஆவது அல்லது காங்கிரஸ் கட்சிக்கே அந்த வாய்ப்பைத் தேடித் தருவது என்ற நினைப்புடன் இருப்பவர் காமராசர் அவர்கள் ஆவார். தாங்களே என்றென்றைக்கும் பதவியிலிருக்கவேண்டும், தம் கட்சிக்கே அவ்வுரிமை பிறப்புரிமையாகும் என்ற நினைப்பு காங்கிரஸ் மேலிடத்தாரின் தொழுநோயாகும். அத்தொழு நோய்க்குப் பலியாகியுள்ள காமராசர் மட்டும், வேறு மாதிரியாக நினைக்க நியாயமுண்டா?

தமிழர்களின் உரிமைகளைப் பெற உருவெடுத்துள்ளக் கூட்டணி, பொதுத் தேர்தலிலும் பங்குகொள்ள முன்வந்துவிட்டால், தமது எதிர்கால மனக்கோட்டை சுக்கு நூருகிவிடுமே என்ற பெருங்கவலை காமராசர் அவர்களுக்கு இப்பொழுது ஏற்பட்டு இருக்கிறது. அதை உள்ளத்துக்குள் மறைத்து வைக்க முடியாத நிலையில்தான், கூட்டணி தேர்தலில் கலந்து கொள்ளுவதைத் தம்மால் புரிந்துகொள்ள முடியும் என்று, தேர்தல் நடைபெறுவதே நிச்சயமில்லாதிருக்கும் இந்நேரத்தில், வலிய முன்வந்து, காமராசர் ஒப்பாரி வைக்கிருர். இதற்கு, கூட்டணியின் எதிர்கால நடவடிக்கைதான் தக்க பதில் கூற வேண்டும்.

சூடானுக்கு ரஷ்யாவின் பொருளாதார உதவி

சூடான் நாட்டிற்குப் பொருளாதார உதவி செய்ய சோவியத் ரஷ்யா முன்வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

ரஷ்யா வழங்குவதாக அறிவித்துள்ள உதவி குறித்து சூடான் மந்திரி சபை பரிசீலனை செய்யும் என்றும் கூறப்படுகிறது.

மகாரியஸ் பாதிரியாரை நாடு கடத்தியதின் எதிரொலி

பிரிட்டிஷ் தூதுவராலுவலகங்கள் முன்பு கிளர்ந்தெழுந்த மக்கள் 'படையெடுப்பு'

மகாரியஸ் பாதிரியாரை நாடு கடத்திய பிரிட்டிஷாரின் போக்கை எதிர்த்துக் கிரேக்க நாட்டிலும், சைப்ரஸ் தீவிலும் பெரும் எழுச்சி தோன்றியிருக்கிறது.

கிளர்ந்தெழுந்த மக்கள், பிரிட்டிஷ் தூதுவராலயங்கள் மீது படையெடுத்திருக்கின்றனர்.

'வெள்ளையரே, வெளியேறுக' என்ற விடுதலை முழக்கம் சைப்ரசிலும், கிரேக்கத்திலும் எதிரொலித்திருக்கிறது.

கிரேக்கத்தில் ஹேராக்கிலியன் எனும் இடத்தில் உள்ள பிரிட்டிஷ் துணைத் தூதுவராலயத்தைக் கிரேக்க மக்கள் தாக்கித் தூள் தூளாக்கியிருக்கின்றனர். இந்தச் செய்தியறிந்த ஏதென்சில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் லண்டனுக்கு அபயம் கோரி ஓலமிட்டிருக்கிருர்.

கிரேக்கத்தில் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

கிளர்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுதிருக்க முக்கியமான நகரங்களில் இராணுவத்தினர் பவனி வருகின்றனர என்றும் தெரியவருகிறது.

மகாரியஸ் பாதிரியாரை நாடு கடத்தியதை எதிர்த்து ஐ. நா. சபையில் கிரேக்கம் புகார் செய்யும் என்றும் தெரியவருகிறது.

கிரேக்கத்தில் உள்ள துருக்கியத் தூதுவராலுவலகத்தினரும் நடுங்கிப் போயிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

விடுதலை கோருவோரை கொன்று குவிக்கின்றனர்

அல்ஜீரியாவில் பிரெஞ்சு இராணுவத்தின் அட்டகாசம்

88 பேர் பலி; 53 பேர் கைது

விடுதலை கோரி வீரப்போரில் ஈடுபட்டிருக்கும் அல்ஜீரிய மக்களைக் கொன்று குவிக்கும் கொலைத் தொழிலை 'திறமை'யாகச் செய்து வருகின்றனர் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்!

கடந்த சனிக்கிழமையன்று மட்டும் பிரெஞ்சு இராணுவத்தினர், கிளர்ச்சியில் ஈடுபட்டோரில் 88 பேர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர் என்று தெரியவருகிறது. இதுவன்னியில், சிறைப்படுத்திச் சித்திரவதை செய்து கொல்வதற்காக வேறு 53 பேர்களையும் கைது செய்திருக்கின்றனராம்.

மொராக்கோ, டுனீசியா போன்று அல்ஜீரியாவிற்கும் விடுதலை வேண்டுமென அல்ஜீரிய மக்கள் கோருகின்றனா; ஆனுல் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளோ, அல்ஜீரியா பிரான்சு நாட்டின் ஒரு பகுதியே தவிர, தனி நாடல்ல என்று கூறி விடுதலை வழங்க மறுத்துவருவதைத் தோழர்கள் அறிந்ததே!

பட்டதாரிகளிடமிருந்து 3000 விண்ணப்பங்கள்

மூன்று உருக்குத்தொழிற்சாலைக்கு தொழில் நுட்பச் சிப்பந்திகள்

அயல் நாட்டு நிபுணர் ஒருவர் ஆலோசகரராம்!

புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கும் மூன்று உருக்குத் தொழிற்சாலைகளுக்கும் தேவைப்படக் கூடிய தொழில் நுட்பச் சிப்பந்திகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக மத்திய நிறுவனம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டதாம்! இதற்காக சிறந்த அயல்நாட்டு நிபுணர் ஒருவர் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிருராம்.

சிப்பந்திகள் தேர்ந்தெடுப்பு வேலை ஆரம்பமாகிவிட்டதென்றும் எஞ்சினியரிங் பட்டதாரிகளிடமிருந்து ஏற்கெனவே 3,000 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துர்காபூர் இரும்புத் தொழிற்சாலை

பிரிட்டிஷ் நிதி வசதி

துர்காபூரில் (மேற்கு வங்கம்) அமைக்கப்படும் இரும்புத் தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரச் சாதனங்களைக் கொள்முதல்செய்ய, லாயிட் பாங்கியும், வேறு சில பாங்கிகளும் கூட்டாகச் சேர்ந்து இந்திய சர்க்காருக்கு 1,15,00,000 பவுன்களுக்குக் கடன் வசதி செய்திருக்கின்றன.

பிரிட்டன்—இந்தியக் கூட்டுறவில் துர்காபூரில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படும். ஆண்டுக்கு பத்து இலட்சம் டன்கள் உருக்கு-இரும்பு இங்கு உற்பத்தியாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

ஒரு இராத்தல் யுரோனியம், 26 இலட்சம் நிலக்கரியின் எரிசக்திக்குச் சமமாகுமாம்!

பஞ்சாப் மாநில புது அமைப்பு

அகாலிதள முடிவு

இமாசலப் பிரதேசத்தைச் சேர்க்காமல் பஞ்சாபையும், பெப்சுவையும் இணைத்து ஒரு இரு மொழி மாநிலம் அமைப்பது; அந்த மாநிலத்தில் பஞ்சாபி மொழி வழங்கும் பகுதி, இந்தி மொழி வழங்கும் பகுதி என்று இரு பிரிவுகள் அமைப்பது; குருமுகி லிபியில் பஞ்சாபியும், இந்தியும் இரு பிரிவுகளின் ஆட்சி மொழியாக அமைவது; இரண்டிற்கும் தனித்தனி மண்டலக் கவுன்சில்கள் அமைப்பது; ஆனுல், ஒரே சட்டசபை, ஒரே கவர்னர், ஒரே பொதுப் பணித் தேர்வுக் குழு என்று இருப்பது—என்ற டில்லி சர்க்காரின் ஏற்பாட்டிற்கு மாஸ்டர் தாராசிங் தலைமையில் உள்ள அகாலிதளம் சம்மதித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

அகாலிதளப் பொதுக் குழு, சில பல நிபந்தனைகளுடன் டில்லியின் ஏற்பாட்டை ஏற்க முடிவு செய்திருக்கிறதாம்.

'பஞ்சாபி மொழிவழி மாநிலம் தேவை' என்று கோரப்பட்டதற்கான தேவைகளில் பெரும் பகுதியை டில்லி ஏற்பாடு பூர்த்தி செய்வதால் தற்போதைக்கு அந்த ஏற்பாட்டை அமுல் செய்ய சந்தர்ப்பமளித்து, பொறுத்திருந்து விளைவுகளை ஆராயலாம் என்று அகாலிதளம் கூறியிருக்கிறதாம்.

அடுத்த பொதுத் தேர்தல்

அடுத்த ஆண்டு துவக்கத்திலேயே நடைபெறும்

"அடுத்த பொதுத் தேர்தல், வரும் 1957-ம் ஆண்டுத் துவக்கத்திலேயே நடைபெறும்," என்று, மாநிலங்கள் சபையில் உதவி உள்நாட்டமைச்சர் பி. என். தத்தார் தெரிவித்திருக்கிறார்.

"தேர்தல் நடத்துவது பற்றிய கால அட்டவணை எங்களிடம் உண்டு: அதைக் கூடியவரை கடைப்பிடிப்போம்" என்றும் அவர் தெரிவித்தாராம்.

"மாநிலப்புதுஅமைப்பு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டவுடன், தொகுதி நிர்ணயக் குழு ஒன்று அமைப்போம்; அது பல்வேறு தொகுதிகளையும், மாநிலப் புதுஅமைப்பிற்கு ஒப்ப நிர்ணயிக்கும். இந்தக் குழு நியமிக்கும் விஷயமும் மாநில புதுஅமைப்பு மசோதாவிலேயே இடம் பெறும்" என்றும் தத்தார் தெரிவித்தாராம்.

கிராம தொழில்களுக்கு

டில்லி வழங்கும் மானியம்

புதுடில்லி, மார்ச் 11—

கிராமத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக டில்லி சர்க்கார் பல மாநிலங்களுக்கும் கடனாகவும், மானியமாகவும் ரூ 6 இலட்சம் வரை வழங்கியிருக்கின்றனராம்.

இதில் உத்திர பிரதேச சர்க்காருக்கு மட்டும் ரூ.92 ஆயிரம் மானியமும், ரூ 63 ஆயிரம் கடனும் கிடைத்திருக்கிறது.

சென்னை மாநிலத்தில் மாதிரி தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஆறு அமைப்பதற்காக ரூ. 57,000 கடனும், ரூ. 45,000 மானியமும் வழங்கப்பட்டிருக்கிறதென்று கூறப்படுகிறது.

இந்த ஆறு தொழிற்சாலைகளும் காந்தி கிராமம், வாலாஜாபாத், அரவக்குறிச்சி, மற்றும் பல்லடம் தாலுகா மஞ்சேஜஷ்வர் தேசீய விஸ்தரிப்புத் திட்டப் பகுதி, கிருஷ்ணகிரி பகுதிகளில் அமைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

கங்காணி முறை: ஒழித்துவிட சட்டம்?

தோட்டங்களில் கங்காணி முறையிலுள்ள தீமைகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம்!

அது பற்றிய முழுப் பிரச்சினையையும் மத்திய சர்க்கார் கவனிக்கின்றனரென்றும், மக்கள் சபை முன்னுள்ள மசோதா ஒன்றில், இது பற்றிய தனது கருத்தை மத்திய சர்க்கார் சேர்க்கலாமென்றும், சென்னை சட்டசபையில், தொழில் அமைச்சர் கூறியுள்ளார்.

தமிழ் சங்கப் பொன் விழா

பி. டி. இராசன் வேண்டுகோள்

முத்தமிழ் சங்கம் இருந்த மதுரையில் தற்போதுள்ள தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டுஐம்பதாண்டுகள் ஆகின்றன. அந்தச் சங்கத்தின் பொன் விழாக் கொண்டாட்டம் வரும் மே திங்கள் இறுதியில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மதுரையில் நடைபெறும் அந்த விழா ஒருவார காலத்திற்கு நடைபெறும். விழா சிறப்பான முறையில் நடைபெற முயற்சிகள் பலவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொண்டாட்டம் வெற்றிகரமாக நடைபெற தமிழ் மக்கள் தங்கள் ஒத்துழைப்பையும், மேலான உதவியையும் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த வேண்டுகோளை மதுரை தமிழ்ச் சங்க பொன் விழாக் கொண்டாட்டக் குழுவின் துணைத்தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்கள் விடுத்திருக்கிறார்.

ஆண்களும்—பெண்களும்

சம உரிமைகள் பற்றி இலட்சுமி மேனன்

"அரசியல் சட்டத்தில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட்டிருந்தாலும், நடைமுறை வாழ்வில், ஆண்களைப்போல பெண்களுக்குச் சம சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை,"

என்று, அகில இந்தியப் பெண்கள் மாநாட்டுத் தலைவியான திருமதி இலட்சுமிமேனன் கூட்டம் ஒன்றில் கூறியிருக்கிறார்.

"அரசியல் சட்டத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் சரியாக, முழுவதுமாக அமுல் செய்யப்படுமாறு செய்ய வேண்டியது அகில இந்தியப் பெண்கள் மாநாட்டின் கடமையாகும்,"

என்றும், 'குவாலியர் மகிலா மண்டல்' சார்பில் நடைபெற்ற அந்தப் பெண்கள் கூட்டத்தில் அவர்குறிப்பிட்டாராம்.

தமிழ் நாட்டு மக்களுக்கு இனி என்ன குறைவு?

சிதம்பரம் (தென்னாற்காடு), ஆத்தூர் (சேலம்), சேர்மாதேவி (திருநெல்வேலி), திருக்கழுக்குன்றம் (செங்கற்பட்டு) ஆகிய இடங்களில் குடிசைத் தொழில் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அப்பளம் உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் ஒப்புதல் தந்துவிட்டனராம். அதற்காக ஒவ்வொரு இடத்திலும் ஓராண்டிற்கு ரூ. 800 செலவிடப்படுமாம்

மாவு பிசையும் இயந்திரத்திற்கு ரூ 650-ம், அப்பளமிடுவதற்கு அவசியமான கருவிகள் வாங்குவதற்குக் குடும்பம் ஒன்றுக்கு ரூ 6 வீதம் 25 குடும்பங்களுக்கு 150-ம் ஒதுக்கப்படுமாம்

உளுந்து, அரிசி மாவு, மற்றும் சில பொருள்கள் வாங்குவதற்கு ஆண்டிற்கு ரூ. 10,000 செலவிடப்படுமாம்.

வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்களுக்கு:

முல்லை-சத்தி

சுற்றுப்பயண அறிக்கை

பொதுச்செயலாளர் அறிக்கைப்படி, கழகச் செயலாளர்கள் உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டுகிறேன்.

கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளின்படி மாவட்டச் செயலாளர், உறுப்பினர் சேர்க்கும் பணியைக் கவனிக்கவும், கழக வேலைகளை குறித்து செயலாளர்களுடன் ஆலோசிக்கவும் சுற்றுப்பயணம் செய்வார்.

கழகச் செயலாளர்கள் தவறாமல் மாவட்டச் செயலாளரைச் சந்திக்க வேண்டுகிறேன்.

15—4—56 : முல்லைக்கொம்மை, நிம்மியம்பேட், வெள்ளக்குட்டை, ஆலங்காயம், ஓமகுப்பம், மிட்டூர், குரிசிலாபேட், அலசந்திராபுரம், எச்லாஸ்புரம், வாணியம்பாடி.

16—4—56 : கண்ணமங்கலம், ஆரணி (சுற்று வட்டம்), தென்னூர், சேவூர், வந்தவாசி, திருவத்திபுரம், போளூர் (சுற்று வட்டம்).

17—4—56: சந்தைபுதுப்பாளையம், செங்கம் (சுற்றுவட்டம்), நாடழகானந்தல், ஆலூர், கெங்குப்பேட், கீழ்பெண்ணாத்தூர், திருவண்ணாமலை (சுற்றுவட்டம்), திருப்பத்தூர்.

18—4—56 : ஆம்பூர், குடியாத்தம், பள்ளிக்கொண்டா, மருதவல்லிப்பாளையம், விருதம்பேட், கழிஞ்சூர், காங்கேயநல்லூர், காட்பாடி, வேலூர் (சுற்றுவட்டம்).

19—4—56 : மேல்விசாரம், ஆற்காடு (சுற்றுவட்டம்), ராணிப்பேட்டை, வாலாஜா, காவேரிப்பாக்கம், அரக்கோணம்.

செய்திச் சுருள்

கரூரில் அண்ணா உணவு விடுதி திறப்பு

9—3—56 காலை 7 மணிக்கு, திண்டுக்கல் ரோடில், தோழர் எம். மாணிக்கசுந்தரம் எம். எல். ஏ., தலைமையில், தோழர் என். இரத்தினம் எம். எல். ஏ., அவர்கள் அண்ணா உணவு விடுதியைத் திறந்துவைத்தார்.

சென்னை—பெரம்பூரில் எஸ். ஆர். யூ. கூட்டம்

9—3—56 மாலை 7 மணிக்கு எரி மைதானத்தில், பெரம்பூர் எஸ். ஆர். யூ. கிளையின் சார்பில் தோழர் டி. முருகவேள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஜி. பராங்குசம், இராகவானந்தம், துரைராஜ் ஆகியவர்கள், எஸ். ஆர். யூ-வின் நோக்கங்களையும், இரயில்வே நிர்வாகத்தின் போக்கைப் பற்றியும், தென்பகுதி இரயில்வே தொழிலாளர் சங்கம்—தென் பகுதி ஊழியர் சங்கம், இணைப்பு முறைகளை பற்றியும் விளக்கிப் பேசினர்.

இராசிபுரத்தில் சிறப்புச் சொற்பொழிவு

4—3—56 காலை 10 மணிக்கு திலகர் 'டூரிங்' டாக்கீசில், நகர தி. மு. கழகச் சிறப்புச் சொற்பொழிவு தோழர் கோபால் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. வி. நாராயணசாமி கருத்தோவியன், எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசினர்.

கலைக் கழக இரண்டாவது ஆண்டு விழா

4—3—56 காலை 8 மணிக்கு, திட்டக்குடி கழக உயர்நிலைப்பள்ளியில் மாவட்டக் கலைக் கழக இரண்டாவது ஆண்டு விழா தோழர் எஸ். சாமிக்கண்ணு படையாச்சி தலைமையில் நடைபெற்றது. தோழர் இரத்தினகிருதாவுக்கரசு தமிழ்க்கொடியேற்றி வைத்தார். ஆண்டறிக்கை வாசித்த பின்னர் தோழர் அ. சிதம்பரநாதனார் துவக்க உரை நிகழ்த்தினர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

சிறை சென்ற தோழர்களுக்குப் பாராட்டு

பிப். 20 பொதுவேலை நிறுத்தத்தை யொட்டிக் கைது செய்யப்பட்டு, விசாரணைக்குப் பின் 15-நாள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த குற்றாலம், திருவாடுதுறை, மேக்கிரி மங்கலம் ஆகிய பகுதிகளின் தி. மு. கழகத் தோழர்கள் அப்துல்ஹக், கண்ணன், இராமதாஸ், கலியமூர்த்தி, சம்பந்தம், கே. [illegible] ராஜு, குப்புசாமி, தம்புசாமி [illegible] ஆகியோர் 7—3—56-ல் விடுதலை செய்யப்பட்டனர்.

மாலை 5 மணிக்கு நரசிங்கன் பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து தோழர்களுக்கு மாலை, அணிவித்து ஊர்வலமாக திருவாடுதுறைக்கு அழைத்து வரப்பட்டு தி. மு. கழகத் தோழர்களால் தேநீர் அளிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்கு, தோழர் இ ரெ. இராசமாணிக்கம் தலைமையில் ஒரு பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. சிறைசென்ற தோழர்களைப் பாராட்டி தோழர்கள் க. பத்மநாபன், எஸ். ஆர். ராதா, கோ. சி. மணி, ஆர். ராமாநுசம், என். சிட்டப்பா ஆகியோர் பேசினர்.

அன்று இரவு 8-30 மணிக்கு, குற்றாலம் புகைவண்டி நிலயத்திற்கு எதிரிலுள்ள திடலில் தி. மு. கழகச் சார்பில் தோழர் என். சண்முகம் தலைமையில் வரவேற்பு நடைபெற்றது. தோழர்கள் ஆர். இராமாநுசம், என். சிட்டப்பா ஆகியோர் சிறை சென்ற தோழர்களைப் பாராட்டிப் பேசினர்.

மாணவர் அமைப்பு துவக்க விழா

3—3—56 காலை 10-30 மணியளவில், சென்னை—வண்ணையம்பதி, நல்லப்ப வாத்தியார் தெரு 6/2 என்னுள்ள தெலுங்குசெட்டியார் மகாசன சங்க நிலயத்தில், தெலுங்கு செட்டியார் மாணவர் அமைப்பு துவக்க விழா தோழர் வி. சுந்தரமூர்த்தி (செட்டியார்) தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

அன்று மாலை 5½ மணியளவில், 'நியூ உட்லண்ட்ஸ்' ஓட்டலில் திரு. எஸ். பரமசிவம் தலைமையில் தேநீர் விருந்து நடைபெற்றது. மாணவத் தோழர்கள் பலர் பேசினர்.

மீரானியா நடுநிலைப்பள்ளி ஆண்டு விழா

3—3—56 மாலை 5½ மணிக்கு களக்காடு மீரானியா நடுநிலைப் பள்ளி ஆண்டு விழாவும், மாணவர் தமிழ்க் கழக ஆண்டு விழாவும், தோழர் வி. பொன்னுசாமி (பிள்ளை) தலைமையில் நடைபெற்றது. ஆண்டறிக்கை வாசிக்கப்பட்ட பின்னர், தோழர்கள் ஆர். சேஷாசலம், க. திருமாறன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, மாற்றுடைப் போட்டி ஆகியவைகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குத் தலைவரவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டது.

இலக்கிய மன்ற ஆண்டு விழாவும்—பிரிவுபசாரமும்

5—3—56 மாலை 3 மணிக்கு சென்னை — இராயபுரம், தூய இராயப்பர் உயர்நிலைப்பள்ளியின் இலக்கிய மன்ற ஆண்டு விழா பள்ளி மண்டபத்தில் தலைமையாசிரியர் திரு ஏ. ஜே ஸ்தனிஸ்லால் தலைமையில் நடைபெற்றது. மாணவத் தோழர் க. நடராசன் ஆண்டு அறிக்கையை வாசித்த பின்னர், தோழர்கள் இப்ராகிம், கி. தியாகராசன், கா. ஆனந்தன், எஸ். முத்துகிருட்டிணன் ஆகியோர் பிரியும் மாணவர்களுக்கு வாழ்த்தும், அறிவுரையும் வழங்கினர். இறுதியாக தோழர் சரணு 'தற்கால இலக்கியம்' என்ற பொருள் பற்றி சிறப்புரை வழங்கினர்.

'சுதந்திரப் பேச்சுக்கள் முறிந்தால் பதவியைத் துறப்பேன்'

சிங்கப்பூர் முதன் மந்திரி மார்ஷல் முழக்கம்

சிங்கப்பூர் விடுதலை பெறுவதற்காக, வரும் ஏப்ரலில் லண்டனில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தோற்றுப்போய்விடுமானால் தனது பதவியைத் துறந்துவிடுவதாக முதன் மந்திரி டேவிட் மார்ஷல் தெரிவித்திருக்கிறார்.

"1957-ல் சுதந்திரம் என்று முடிவாகுமானால், அந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யலாம் என்றிருக்கிறேன்; இப்போதிருக்கிற சட்டசபையை இரண்டு மடங்காக—இன்னும் 25 பேர்களைச் சேர்த்து ஆக்கவேண்டும் என்று கோருவேன்"

என்றும் மார்ஷல் குறிப்பிட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

மூடிய கல்லூரி

திறப்பதற்கு திரு — கொச்சி சர்க்கார் முன்வருகிறது!

திருவனந்தபுரம், மார்ச் 11—

'வகுப்புகளுக்கு அமைதியாக வந்து செல்வோம்' என்று மாணவர்கள் தெரிவிப்பார்களானால், மார்ச் 2-ந் தேதியன்று மூடிவிட்ட திருவனந்தபுரம் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை மீண்டும் திறக்கத் தயார் என்று, திரு-கொச்சி சர்க்கார் அறிவித்துள்ளனராம்.

சில மாணவர்கள், தாங்கள் ஆயுர்வேத பட்டம் பெற்றபின் அலோபதி மருத்துவம் நடத்தவும் அனுமதிக்கவேண்டும் என்பதையும் தங்கள் கோரிக்கைகளுள் ஒன்றாகக்கொண்டு கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

இவர்களில் 18 பேர் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள்.

மாணவர்களின் கோரிக்கைகள் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை சர்க்கார் வெளியிடவில்லை. ஆனால் குழுவினர், ஆயுர்வேத மாணவர்கள் எந்தக் கல்வி பெறுகின்றனரோ அந்தத் தொழில் நடத்த அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறியிருப்பதாகத் தெரிகிறது.

தொழில் நடத்துவது என்பது, கல்விப் பயிற்சிபெற்ற பின்னர் தான் என்பதால், தொழில் செய்வது பற்றி இறுதி முடிவு மேற்கொள்ளுவதை ஒத்திவைத்துவிட்டு தொடர்ந்து பயிற்சி அளிப்பது நல்லது என்று சர்க்கார் தங்கள் குறிப்பில் தெரிவித்திருக்கின்றனராம்.

மாநில புது அமைப்பு மசோதா

மாநில சர்க்கார்களுக்கு அனுப்ப முடிவு

புதுடில்லி, மார்ச் 10—

சில விவரங்கள் பூர்த்தியாகாவிட்டாலும், ஏற்கனவே சர்க்கார் மேற்கொண்டுள்ள முடிவுகளை உள்ளடக்கியுள்ள மாநில புது அமைப்பு மசோதாவை மாநில சர்க்கார்களுக்கு அனுப்பி வைப்பது என்று டில்லி முடிவு செய்துவிட்டதாம்.

மேற்கு வங்கம்—பீகார் இணைப்பு பற்றி திட்டமான குறிப்பு எதுவும் மசோதாவில் இடம் பெறாதாம்.

மேற்கு வங்க—பீகார் இணைப்பு நடைபெறாததாகவே எண்ணிக்கொண்டு, இரு மாநிலங்களுக்கும் எல்லை விவகாரத்தில் உள்ள தகராறுகளை இரு மாநிலத்தவருமே கூடிப்பேசித் தீர்த்துக்கொள்வது என்றும், இரு மாநிலங்களும் தனித்தே இருப்பது என்றும் மசோதா தெரிவிக்குமாம்.

பஞ்சாபைப் பொறுத்து, கிழக்கு பஞ்சாப் பெப்சு இரண்டையும் இணைத்து ஒரே மாநிலமாக்குவது என்று மசோதா தெரிவிக்கும் என்றாலும், மண்டல கவுன்சில் அமைப்பது பற்றிய விவரங்கள் இன்னும் தயாராகவில்லை என்றும் கூறப்படுகிறது.

சர்க்காரின் கொள்கைகள் குறித்துஅகாலியர்முடிவுஅறிவித்த பின்னரே, பஞ்சாப் பற்றிய இறுதி முடிவை வெளியிடுவது என்றும் சர்க்கார் முடிவெடுத்திருக்கின்றனராம்.

பம்பாய் நகரைப்போல, இமாசலப் பிரதேசமும் மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படும் என்றும், இவை குறித்த விவரங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்திலிருப்பவை நீண்டநாள் அவ்வாறு இருக்காது என்றும், வேறு மாற்றம் ஏற்படுவதற்கு ஒரு இடைக்கால ஏற்பாடாகவே அது அமையும் என்றும் கூறப்படுகிறது.

காமராசர் பற்றி அண்ணா

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

“அர்த்தால் மூலம் நாம் எதிர்பார்க்கும் உடனடிப் பலன் எல்லாம், கூட்டணியில் ஏற்பட்டுள்ள ஒற்றுமை உணர்ச்சி, ஒருமைப்பாடு, நல்ல பண்பு, சிறந்த ஆர்வம் இவை எல்லாம் பதம் கெடாமல் பாதுகாத்துக்கொண்டு, முடியுமானால் அவற்றைப் பெருக்கி விரித்து பக்குவமாகப் பயன்படுத்துவதற்கு எத்தனை தோழர்கள் கிடைப்பார்கள் என்பதை கணக்குப் பார்ப்பதுதான்.

“எனவே, கூட்டணி நடத்திய அர்த்தாலின் பலன்களை ஆராய்வதைவிட, அர்த்தாலுக்குக் காரணம் என்ன என்பதையே காமராசர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

“ஆனால் காமராசர், கூட்டணி பற்றி ஒரு அவசர வியாக்கியானம் தருகிறார்.

“கூட்டணியின் நோக்கம் உண்மையில் தமிழ் நாட்டை இந்தியாவிலிருந்து பிரித்துவிடுவதுதான்; ஆனால், அதை அவர்கள் சொல்வதற்கு வெட்கப்படுகிறார்கள். ‘கோழைகள்; கொள்கைக்கே துரோகிகள்’ என்றெல்லாம் பேசியிருக்கிறார், காமராசர்!

“கூட்டணியில் தி. மு. கழகம் இருப்பது உண்மை. அது திராவிட நாடு வேண்டுமெனக் கேட்பதும் முக்காலும் உண்மை. ஆனால், தி. மு. கழகம்—தமிழரசுக் கழகத்தோடும், கம்யூனிஸ்டு கட்சியோடும், இதரர்களோடும் கைகோர்த்துக்கொண்டு, கூட்டணியில் வேலை செய்யும்போது, அதற்கு, ‘திராவிட நாடு கொள்கைக்குக் கூட்டணியைப் பயன்படுத்த வேண்டும்’ என்ற அரசியல் அற்பத்தனத்தில் கழகம் ஈடுபடவில்லை. அதேபோல, கம்யூனிஸ்டுகளுக்குத் தங்கள் கொள்கையைக் கூட்டணியில் புகுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை. ஆனால், காமராசருக்கு, கல்லூரியில் போய் எங்களைத் தூற்றுகிற போக்கு இருக்கிறது. ‘அரசியல் நாகரீகம் எவருக்கு இருக்கிறது?’—என்பதை, நாட்டு மக்களே முடிவு செய்துகொள்ளட்டும்.

“கூட்டணியின் திட்டம் அர்த்தால் நடத்துவது; அதன் மூலம் நாட்டு மக்களுக்கு எல்லைக் கிளர்ச்சியை அறிவிப்பது; அந்த எல்லைக் கிளர்ச்சி, ‘தமிழ் வழங்கும் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டும்’ என்ற மூலாதாரக் கோட்பாட்டைக்கொண்டது. இந்த அளவே தவிர, கூட்டணியின் நோக்கம், தமிழ் நாட்டைத் தனியாகப் பிரிப்பது அல்ல.

“நாங்கள்—தி. மு. கழகத்தவர், ‘திராவிட நாடு இந்தியாவிலிருந்து பிரியவேண்டும்; சுதந்திரம் பெறவேண்டும்’ என்று கோருபவர்கள்தான்; நாங்கள் தனியாக அந்தக் கோரிக்கையை கூறுவதில் இதுவரையில் வெட்கப்பட்டதில்லை; நாங்கள் கூறிக்கேட்பதில் காமராசருக்கு மகிழ்ச்சி என்றால், இப்போதும் கூறுவோம் கேட்டுக்கொள்ளட்டும். (அண்ணா அவர்கள் ‘திராவிட நாடு தேவையா?’ என்று கூட்டத்தில் குழுமியிருந்த மக்களைக் கேட்டார்கள்; கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும், ‘தேவை’ என முழக்கமிட்டார்கள்.)

“‘காமராசர் கூட்டணியின் குட்டை உடைக்கிறார்’ என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது; நீங்கள் காமராசருக்கு நல்ல சாட்டை தரவேண்டும்’ என்று ஒரு தோழர் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்.

“சில மனிதர்களுக்கும்கூட எத்தனைதான் சாட்டையடி தந்தாலும் மனதில் உரைப்பதில்லை; ஒரே ஒரு சாட்டைதான் அவர்களுக்கு உரைக்கும்; அதுதான் தேர்தல் சாட்டை!

“தேர்தலில் எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து எங்கே காங்கிரசைத் தோற்கடித்துவிடுவார்களோ என்ற திகில்தான் காமராசருக்குக் கூட்டணிமீது கோபம் வருவதற்குக் காரணம். அந்தப் பயத்தாலும், கிலியாலும்தான் லயோலா கல்லூரியில் ஒருவரை ஒருவர்காட்டிக்கொடுக்க வேண்டுமென்ற நினைப்பில் கூட்டணி பற்றிப் பேசியிருக்கிறார்.

“என்னுடைய ராஜதந்திர அறிவு தோற்றுப்போனாலொழிய, ம.பொ. சிவஞானம் அவர்களின் சீரிய யோசனை பழுதுபட்டுப்போனால் ஒழிய, ஜீவாவின் ஆர்வம் மங்கினால் ஒழிய, பிரஜா-சோஷலிஸ்டுகள், சோஷலிஸ்டுகளின் பண்பு பட்டுப் போனால் ஒழிய, ஷெட்யூல்ட் வகுப்பு சம்மேளனம் நம்முடன் இருக்க வேண்டுமெனக் கொண்டுள்ள கனிவு கெட்டுப்போனால் ஒழிய, கூட்டணி, வரப்போகும் பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடும். அந்த அணிக்குக் கூட்டணியை இழுத்துவர என் முழு மூச்சு இருக்கும்வரை பாடுபடுவேன். இதில் ஒளிவு என்ன? மறைவு என்ன? கூட்டணியினரை எப்போது இது குறித்து கேட்பேன் என்றால், ஜூன் மாதத்தில்!

‘மே மாதத்தில், நாட்டு மக்களை தி. மு. கழகம் கேட்கப்போகிறது—‘தேர்தலில் நிற்பதா, வேண்டாமா?’ — என்பது குறித்து; தேர்தலில் நிற்க வேண்டுமேன மக்கள் கூறுவார்களேயானால், அதை வைத்துக்கொண்டு, கூட்டணியினரைக் கேட்பேன்—‘ஏதேதோ செய்ய வேண்டும் என்கிறீர்களே! இதோ, எங்கள் கட்சி—தி. மு. கழகம் தேர்தலில் நிற்க வேண்டுமேன மக்கள் முடிவு கூறியிருக்கிறார்கள்; நிற்கலாம், வருகிறீர்களா, நீங்கள்?’—என்று! அதற்குள்ளாகவே காமராசர் ஏன் அலறுகிறார்? கிலி கொள்கிறார்?

“‘என்னுடைய கரம் வலுவாய்த்தான் இருக்கிறது,’ என்று பேசுகிறாரே, கா்மராசர்; ஓட்டுத்தான் ‘கர’த்தின் வலு என்றால், சென்ற தேர்தலில் காங்கிரசல்லாதாருக்குக் கிடைத்த ஓட்டுகளையும் கணக்கிலெடுத்துப் பார்க்கும்படி காமராசரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“ஊரறிய உலகறியக் கூறுகிறேன் — சென்ற தேர்தலில் காங்கிரசிற்குக் கிடைத்ததைவிட காங்கிரஸ் அல்லாதாருக்குக் கிடைத்த வாக்குகள்தான் அதிகம்; ஆனால், காங்கிரசல்லாதார் பிரிந்து கிடந்ததால், காங்கிரசார் மந்திரிகளானார்கள்.

“பக்தவத்சலம், பொன்னேரியில் தோற்கடிக்கப்பட்டது என்? குமாரசாமி ராஜா இராசபாளையத்தில் தோற்கடிக்கப்பட்டு, கவர்னராக்கப்பட்டதேன்? கோபால ரெட்டியார் வெற்றி பெருதது எதனால்? இன்னும் பெரிய பெரிய காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் தோற்றது ஏன்? இந்தத் தோல்விகள் எல்லாம், மக்கள் காங்கிரசை ஆதரிக்கிறார்கள் என்பதையா சொல்லுகிறது?

“ஜீவா வெற்றி பெற்றது எப்படி? அந்தோணி பிள்ளை ஜெயித்தது ஏன்? நமது திராவிட பார்லிமெண்டரி கட்சி உறுப்பினர்கள் எப்படி வெற்றிபெற முடிந்தது? இவர்களுக்குக் கிடைத்த ஓட்டுகள் எல்லாம் காங்கிரசுக்கு எதிராகக் கிடைத்த வாக்குகள் தானே?

“காங்கிரசிற்கு எதிரானவர் எல்லாம் ஒன்றாகக் கூடினால் ‘மெஜாரிட்டி’யாக வர முடியும் என்று பேசிக்கொண்டிருக்கும் போதுதானே, இந்தியாவின் தத்துவாசிரியர் — அரசியல் நுட்பத்தை ஆங்கில அறிவோடு கலந்து செயல்படுத்துபவர் — மனுமாந்தாதி காலத்திலிருந்த மகத்துவத்தை தற்காலத்திலும் நிலைநாட்ட விரும்பும் அரசியல் தத்துவாசிரியரான ஆச்சாரியாரை அழைத்து வந்தார்கள்?

“காமராசருக்கு, ‘அரசியலை நம்மாலும் நடத்த முடியும்; நடத்தப் போதுமான ஆற்றல் இருக்கிறது’-என்ற துணிவிருப்பது உண்மையானால், அன்றல்லவா அவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கவேண்டும்? ஆனால், அப்போது மாம்பலத்திற்கு ஓடி, ஒடிந்த உடலோடும், ஒடியும் உள்ளத்தோடும் இருந்த ஒரு முதுபெரும் கிழவரை அழைத்து வந்து ஆட்சியில் அமர்த்தினார்கள். அவரது சாகசத்தினால் ஏற்பட்ட பிளவினால் அல்லவா, காமராசர் இப்போது பதவியிலமர்ந்திருக்கிறார்?

“எனவே, கூட்டணியினர், ‘யார் யார் எந்த எந்தத் தொகுதியிலே போட்டியிடுவது? யார் யார், யார் யாருக்கு என்னென்ன உதவிகள் செய்வது?’—என்று பாகுபாடு செய்துகொண்டு, ஒற்றுமையோடு ஒரு ஒழுங்கான வேலைத் திட்டம் வகுத்துக்கொண்டு போட்டியிடுவார்களானால், அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக கீர்த்திமிக்க வெற்றி பெற முடியும்.

“காமராசர், தேர்தலில் காங்கிரசிற்குப் போட்டி இருக்கக் கூடாதென எண்ணுகிறார். அதனால்தான், ‘கூட்டணி தேர்தலுக்கு நின்றுவிடுமோ’ என்ற பயத்தினால் கூட்டணியை ஏசுகிறார்.

“‘தேர்தலுக்கு நிற்போம்’—என்று கூறுவதில் என்ன தவறு? எல்லாம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, தேர்தலிலும் நிற்கமாட்டேன் என்று சொன்னால், அது கண்டனத்திற்குரியதல்ல என்றாலும், கேள்விக்குரியது!

“‘கந்தசாமி அயோக்கியன்’ என்கிறாய்; ‘முனுசாமி யோக்கியன் அல்ல’ என்கிறாய்; ‘இராமசாமி வேண்டாம்’ என்கிறாய்; ‘கோவிந்தசாமி கூடாது’ என்கிறாய்; பின், ‘முனுசாமி, நீயே வாயேன்.’ என்றால், ‘நானும் மாட்டேன்’ என்றால் என்ன பொருள்? யார்தான் காரியத்தைக் கவனிப்பது?

“காங்கிரஸ் கூடாது; கம்யூனிஸ்டுகளுக்கு திராவிடப் பற்று இல்லை; சோஷலிஸ்டுகளும் அப்படியே! பின், பலரும் வேண்டாம்—நானும் மாட்டேன் என்றால், நாட்டவர் கேள்வி கேட்கமாட்டார்களா?

“‘வேலைக்கும் வரமாட்டோம்; வேலைக்கு வருபவர்களையும் குறை கூறிக்கொண்டே இருப்போம்’ என்றால், மக்கள் கேட்கமாட்டார்களா?

எனவே, தி. மு. கழகம் தேர்தலுக்கு நிற்பது என்பதை வெட்கப்படக்கூடிய ஒன்றாகக் கருதவில்லை. தேர்தலுக்கு நிற்கிறோம் என்பது, என்ன, பஞ்சமாபாதகங்களுள் ஒன்றா?

“பெரியார், அடிக்கடி சமயம் வாய்க்கும் போதெல்லாம் ‘இந்தக் கண்ணீர்த்துளிகள், ஏன் என்னிடமிருந்து பிரிந்து சென்றார்கள் தெரியுமோ? தேர்தலுக்கு நின்று வெற்றி பெறத்தான்,’ என்று கூறி வருகிறாரல்லவா? அதை அப்படியே ‘பிளாட்டிங்’ பேப்பரில் ஒத்தி எடுத்துக் கொண்டுள்ள காமராசரும், தேர்தலுக்காகத்தான் இவர்கள் கிளர்ச்சி நடத்துகிறார்கள் என்று எண்ணுகிறார் போலும்!

“காமராசருக்குக் கண்டிப்போடு சொல்கிறேன்—எங்களுடைய பல நோக்கங்களில் தேர்தலுக்கு நிற்பதுவும் ஒன்று. பெரியார் அவர்களுக்கும் தாழ்மையோடு—ஆனால், தன்மானத்தோடு, உறுதியோடு—ஆனால், வெறிக்கு இடம் தராமல் தெரிவித்துக் கொள்கிறேன்—எங்களுடைய பல நோக்கங்களில் அதுவும் ஒன்று என்பதை!

“வீதியிலே சைக்கிள் ஓட்டிக்கொண்டு ஒருவன் வருகிறான்; எதிரில் ‘ரோட் ரோலர்’ ஒன்று வருகிறது; அது வருகிறதே என்பதற்காக, சைக்கிள்காரன் திருப்பி வேறு பக்கம் ஓட்டப் பார்க்கிறான்; அப்போதும் ‘ரோட் ரோலர்’ சைக்கிள் வரும் பக்கம் எல்லாம் திரும்பித்திரும்பி மோத வந்தால்—பாதையை மறித்துக்கொண்டால் சைக்கிள்காரன் என்ன செய்வான்? சைக்கிளை மரத்தோரம் வீசிவிட்டு, பாதையில் நின்றுகொண்டு, ‘வேண்டுமானால் என்மேலே ஏற்றிவிட்டுப் போங்கள்’ என்று கூறுவான்; அதுபோலத்தான், நாமும்; நமது பாதையை மறித்துக்கொண்டே இருந்தால் என்ன செய்வது?

“பெரியாரும் — காமராசரும் சேர்ந்து தேர்தலில் போட்டியிடுவதானாலும், தி. மு. கழகம் அவர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க உறுதி கொண்டுள்ளது என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

“தி. மு. கழகம் எந்தக் கட்சியுடனும் வம்புக்குப் போவதில்லை. எவர் நீட்டிய கரத்தையும் குலுக்கத் தவறியதில்லை. தேர்தலுக்கு நிற்பதைப் பற்றி இப்போதல்ல — தேவிகுளம், பீர்மேடு பிரச்சினை எழு முன்பிருந்தே யோசித்துக்கொண்டிருக்கிறது.

“நண்பர் ஒருவரிடத்தில் காமராசர் கூறினாராம் — ‘பெரியாரை அண்ணாதுரை மேலே போட்டு, அண்ணாதுரையை பெரியார் மேலே போட்டு காரியத்தைச் சாதிக்கும் வித்தை எனக்குத் தெரியும்—என்று!

“நான் கூறுகிறேன்—எனக்கும் தெரியும், கரையாளரை காமராசர் மேல்போட்டு காரியம் செய்யும் வித்தை! ஆனால், அதுவல்ல நிலைமை!

“வித்தைக்காரன், இரண்டு கூடைகளைக் கவிழ்த்துவிட்டு, ஒன்றில் நரித் தோலையும், மற்றொன்றில் பாம்புத் தோலையும் போட்டு, ‘இப்போது நரியும்—பாம்பும் வரச் செய்கிறேன்; என் வயிற்றுக்குக் காசு வேண்டும்; காலணா தாருங்கள்’—என்று கேட்பதுபோல, வித்தைக் காட்டுகிறார், காமராசர்!

“தேர்தலுக்கு நிற்பது என்பது, கூட்டணியின் இப்போதைய திட்டமல்ல.

பண்புள்ளவர்களாலும், நல்ல மனிதர்களாலும் நடத்தப்பட்ட அர்த்தால், பண்டித நேருவின் கண்களைத் திறந்திருக்கிறது. அவர் மனதிலே நல்ல ஒருயோசனை உதித்திருக்கிறது. அதைப் பயன்படுத்தி — அவர் கூறியபடி, தகராறுள்ள எல்லைப் பகுதிகளில் வாக்கெடுப்பு நடத்துவதற்கான வழிவகைகளைக் காமராசர் சர்க்கார் செய்ய முன்வரவேண்டும்.

“நேருவுக்கு அர்த்தாலைப் பற்றியும், அதன் அமைதி கெடாத தன்மையையும் எடுத்துச் சொல்லி, தமிழர்தம் பிரதேசங்களைத் தமிழருக்குப் பெற்றுத் தர காமராசர் சர்க்கார் முன்வர வேண்டுமென்பதைத்தான், கூட்டணி, ‘காமராசரின் கரத்தைப் பலப்படுத்துவது’ என்று குறிப்பிட்டது. இதைக்கண்டு அவர், ஏதோ, தன் பலவீனமான கரத்திற்கு நாம் ‘டானிக்’ தர நினைப்பது போல கோபப்பட்டிருக்கிறார்.

“நேரு, மனம் உருகுவது போலப் பேசியிருப்பதைப் பக்குவமாகப் பயன்படுத்தி, தமிழர்தம் எல்லையைப் பெற வேண்டும் என்பதுதான் கூட்டணியின் விருப்பம்; அதையே தி. மு. கழகமும் இப்போது காமராசருக்குக் கூறுகிறது.”

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்
சுற்றுப்பயணம்

★

மார்ச் 14: இருகளூர்
15: திருச்சி
16: பட்டீஸ்வரம்
17, 18: சென்னை

கழகக் கூட்டம்

துறையூர் (ரெகுநாயகிபுரம்):
தி. மு. கழகத் துவக்க விழா
15—3—56 மாலை 4 மணிக்கு
தலைவர்: அ. ராமையன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
என். எஸ். இளங்கோ
மற்றும் பலர்

சென்னை—8-வது வட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு

“14—3—56-ல் நடைபெற விருந்த கழகச் செயற்குழுக் கூட்டம், 18—3—56 மாலை 3 மணியளவில் நடைபெறும்” என்று, செயலாளர் சோ. சுந்தரம் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (2¼ சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.